**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் -2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது மறுப்பு அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன், முகாமைத்துவத்தினால் கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர, தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் தொடர்புடைய தகவல்களை வெளிப்படுத்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை தொடர்புடைய தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்காமை**

| | உரிய நியமத்துக்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 14 (அ) ஆம் பிரிவுக்கு முரணாக, மயிலடி மீன்பிடித் துறைமுகத்தின் மீண்டுவரும் தன்மையிலான ரூபா 1,140,626 செலவு நடைபெறும் வேலையாகக் கணக்கில் பதியப்பட்டிருந்தமையினால், நடைமுறையல்லாத சொத்துக்களின் மீதி மற்றும் மீளாய்வாண்டின் இலாபம் அந்த தொகையால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | மயிலடி மீன்பிடித் துறைமுகத்தின் நிர்மாணிப்புக்களின் ஒரு பகுதி அமைச்சின் செயற்றிட்டப் பிரிவினால் செலுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை மட்டுமே செலுத்துமாறு அமைச்சு எமக்கு அறிவித்தது. அத்துடன், இந்த நிர்மாணிப்புப் பணிகள் நிறைவடையாமையினால், இந்தப் பணம் தற்காலிகமாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | மீண்டுவரும் தன்மையிலான செலவு பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 14 (அ) ஆம் பிரிவின்படி கணக்கில் பதிதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில், மீன்பிடித் துறைமுகங்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு மொத்தம் 57,418 லீற்றராக இருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 22,781,658 ஆக இருந்தது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 25 ஆம் பிரிவின்படி, அத்தொகை சேத செலவாகக் கணக்கில் பதியடப்படவில்லை. | டீசல் மற்றும் மண்ணெண்ணெய் இருப்புக்களின் அசாதாரண இருப்பு குறைவு மற்றும் மிகை நிலவும் துறைமுகங்கள் தொடர்பாக தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையினால், அந்த அவதானிப்புக்கள் பெறப்பட்டதன் பிற்பாடு இருப்புக்கள் தொடர்பில் கணக்கில் பதியப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 25 ஆம் பிரிவின்படி செயலாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 46,000,000 ஆன மூலதன அளிப்புகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன்படி வருமானமாக கணக்கில் பதியடப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டில், மூலதனச் செலவினங்களுக்காக அரசாங்க அளிப்புகளாக கிட்டதட்ட ரூபா 46 மில்லியன் பெறப்பட்டதுடன், அத்தொகை இலாபநட்டக் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத் திற்கு கிடைக்கின்ற மூலதன அளிப்புகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன்படி வருமானமாக கணக்கில் பதியப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பதியடப்படாத மீன்பிடித் துறைமுகங்களுக்குச் சொந்தமான 87 சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா91,205,033 வாடகை வருமானம் ஈட்டப்பட்ட போதிலும், அந்தச் சொத்துக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 13 இன்படி முதலீட்டு சொத்து ஒன்றாக இனங்காணப்படவில்லை. | துறைமுகங்களில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களை முதலீட்டு சொத்தாக தனித்தனியாக இனங்காண முடியாமைக்கான காரணம், துறைமுகங்களில் உள்ள சொத்துக்களின் ஒரு பகுதி குத்தகைக்கு விடப்பட்ட காரணமாக சொத்துக்களின் பெறுமதியை தெளிவாகக் கண்டறிவது கடினம் என்பதனாலாகும். அதன் காரணமாக குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் பதியப்படும்போது ஆதனம், பொறித்தொகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. | கூட்டுத்தாபனத் தின் முதலீட்டு சொத்துக்களை இனங்கண்டு அவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்13 இன் படி கணக்கில் பதிதல் வேண்டும். |
| (உ) | நடைபெறும் வேலை கணக்கு மீதியினுள், 05 ஆண்டுகளுக்கும் மேலாக முன்கொண்டு செல்லப்படும் ரூபா 9,754,409 மீதி இருந்ததுடன், இந்த மீதியானது தற்போது பௌதிகரீதியில் உள்ள மீதியா என்பதுபற்றி உறுதி செய்யப்படவில்லை என்பதுடன் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இல் 77இன்படி, சேதங்கள் பொருட்டு சீராக்கப்படவில்லை. | நடைபெறும் வேலை கணக்கில், முந்திய ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக காட்டப்பட்டிருந்த ரூபா 9,754,409 பெறுமதியினுள் இதுவரையில் முடிவுறுத்திய பணிகளை இனங்கண்டு, 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது தேவையான சீராக்கங்களை செய்து கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இல் 77இன்படி இந்த மீதி பொருட்டு சேத சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்வுக் கூற்றில் தொழிற்படு மூலதனச் சீராக்கத்தில் அடங்கிய வர்த்தகச் சென்மதிகளின் பெறுமதி ரூபா 10,474,859 குறைந்த போதிலும் அது, ரூபா 12,525,850 குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையினால், காசுப் பாய்வுக் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 2,050,991 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகிறேன். சரிசெய்து கொள்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | காசுப் பாய்வுக் கூற்றை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பணிக்கொடை கொடுப்பனவு அட்டவணையின்படி மீதி ரூபா 8,891,397 ஆன போதிலும், காசுப் பாய்வுக் கூற்றில் செயல்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப்பாய்வு ரூபா8,031,642 ஆக காட்டுவதன்மூலம் காசுப்பாய்வு ரூபா859,755 குறைவாக காட்டப்பட்டுள்ளது. | நடப்பாண்டில் பணிக்கொடையாக செலுத்தப்பட்ட தொகை காசுப் பாய்வுக் கூற்றில் சீராக்கப்பட்டுள்ளது. பணிக்கொடையாக செலுத்தப்பட்ட தொகை நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 06 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | காசுப் பாய்வுக் கூற்றை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் மோதற மீன்பிடித் துறைமுக வளாகத்தை குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கிய உடன்படிக்கை 2021 மார்ச் 23ஆம் திகதி முடிவடைந்து வளாகத்தை ஒப்படைத்திருந்தும் அன்று முதல் 2022ஆம் ஆண்டு சனவரி 31ஆம் திகதி வரை ரூபா17,000,000 குத்தகை வருமானமாக அறவிடதகாத மீதி கணக்கில் பதியப்பட்டிருந்தது. வசூலிக்கப்படும். இதன் விளைவாக, மீளாய்வாண்டில் இலாபம் ரூபா1,700,000 அதிகமாகவும், திரண்ட நட்டம் ரூபா15,300,000 குறைவாகவும், குத்தகை கடன்பட்டோர் ரூபா17,000,000 அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | சட்டப் பிரிவிடமிருந்து எழுத்துமூல அறிவுறுத்தல்களைப் பெற்ற பிறகு, பணிப்பாளர் சபைக்கு அனுப்பி, பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுக்கு உட்பட்டு, தேவையான கணக்குகள் சீராக்கப்பட்டுள்ளன. . | குத்தகை உடன்படிக்கை பிரகாரம் வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் பதியப்பட வேண்டும். |
| (ஈ) | ஒரு கப்பல் துறைமுகத்தை விட்டு வெளியேறும் போது, அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பட்ட பின்னரே அது விடுவிக்கப்பட | திக்கோவிட மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்காக ஏற்கனவே பல | அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், அனைத்து கட்டணங்களும் செலுத்துவதற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட கப்பல்கள் பொருட்டு திக்கோவிட துறைமுகத்தில் ரூபா146,047,698 ஆன நிலுவை நங்கூரக் கட்டணம் அறவிடுதல் நிச்சயமற்றது என்பதனால் அதற்கான இழப்புக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. | நிறுவனங்கள் சார்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அக்கப்பல்கள் பல காலமாக செயல்படாமல் உள்ளமையினால், ஏனைய துறைமுகங்களில் நிலுவையாகவுள்ள நங்கூரக் கட்டணம் அறவிட முடியாதுள்ளது. | பின்னரே கப்பல்கள் விடுவிக்கப்பட வேண்டியதுடன் அறவிடுவதற்கு நிச்சயமற்ற நங்கூரக் கட்டணம் தொடர்பாக இழப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (உ) | நிதிக்கூற்றுக்களின்படி, 5 துறைமுகங்களின் கடன்பட்டோர் மீதிக்கும் தொடர்புடைய பயன்பாட்டு ஆவணங்களின்படி மீதிக்கும் இடையே ரூபா11,121,424 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் பொருட்டு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானதாகவும் தெளிவாகவும் இல்லை என்பதனால் இதுதொடர்பாக தேடிப் பார்த்து சரிசெய்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிக்கும் அட்டவணைகளின்படி மீதிக்கும் இடையிலான வேறுபாடுகள் இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கடற்றொழில் அமைச்சுக்கு பாதுகாப்பு சேவை வழங்கல் பொருட்டு 2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூபா70,717,789 அறவிட வேண்டிய போதிலும், இந்த நிலுவைக்கு அமைச்சு உடன்படாமையினால் அறவிடுதல் நிச்சயமற்றது என்பதுடன் அதற்கான இழப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மேலும், இந்த மீதியின் சரியான தன்மையை உறுதிபடுத்திக் கொள்வதற்கு அமைச்சுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கடற்றொழில் அமைச்சுக்கும் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட எழுத்துமூல உடன்படிக்கையின்படி, பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன், அதில் குறிப்பிடப்பட்ட தொகை அமைச்சினால் செலுத்தப்படாமையின் காரணமாக நிலுவை கடன்பட்டோர் மீதி காட்டப்படுவதுடன், இது தொடர்பாக அமைச்சுடன் கலந்துரையாடி தீர்வு காண ஏற்பாடு செய்யப்படும். | அறவிடல் நிச்சயமற்ற நிலுவை கடன் மீதி பொருட்டு இழப்புக்கான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (எ) | கிடைக்க வேண்டிய குத்தகை வருமானத்தில் ரூபா19,384,026 தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலான பழைய மீதிகளாகும். அவற்றை அறவிடுதல் நிச்சயமற்ற தன்மையில் | குத்தகை கடன்பட்டோர் மீதியினுள் 05 வருடங்களுக்கு மேல் உள்ள நிலுவை மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டப் பிரிவுக்கு | வருடாந்தம் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய குத்தகை வருமானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுவதுடன் அந்த இழப்புக்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. | அனுப்பப்பட்டுள்ளதுடன், குறித்த நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்காக வழக்கு தாக்கல் செய்து பகுதி பகுதியாக அறவிட்டுக் கொள்வதற்கு சட்டப் பிரிவு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. | அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மூல ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா36,659,356 முற்கொடுப்பனவு மீதி 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான நிலுவைகள் ஆவதுடன் இந்த மீதிகள் தொடர்பில் இனங்கண்டு நிதிக் கூற்றுக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான முற்கொடுப்பனவு மீதி தொடர்பான தகவல் சேகரிப்பு குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும், போதிய சான்றுகளை திரட்ட முடியவில்லை என்பதுடன், நடப்பாண்டில் முற்கொடுப்பனவு மீதிகள் தொடர்பான அட்டவணை கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | முற்கொடுப்பனவு மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | கால பகுப்பாய்வு இன்றி நீண்ட காலமாக நிலவும் ரூபா 49,780,442 ஆன கடன்கொடுத்தோர் 13 மீதிகள் தொடர்பான மூல ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதுடன், இந்த மீதிகளை கொடுத்து தீர்த்தல் நிச்சயமற்ற நிலையில் இருந்தபோதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகள் 1992 ஆம் ஆண்டிலிருந்து இருக்கும் மீதிகளாவதுடன், இந்த மீதிகள் தொடர்பாக நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு அனுப்பப்பட்டு, அங்கீகாரத்துக்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டது. பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலின்படி, அந்த கடன் மீதிகளை பதிவழிப்பதற்கான அங்கீகாரத்துக்காக அரச பொது தொழில்முயற்சி திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. | கடன்கொடுத்தோர் மீதிகளை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | அமைச்சின் அளிப்புகளின் கீழ் மீனவ சமூகத்தின் நலனுக்காக "திரிசவிய" என்ற பெயரில் நிறுவப்பட்ட ரூபா8,610,910 மீதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறை பொறுப்புகளின் கீழ் முன்கொண்டு செல்லப்படுவதுடன், அதற்கு அடிப்படை ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமையினால் அதன் துல்லியத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. . | இதுதொடர்பில் தேவையான ஆவணங்களை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து 2024 அம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான அடிப்படை ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின்படி பெறுமதி ரூ. | நேரொத்த அறிக்கையின்படி பெறுமதி ரூ. | வேறுபாடு ரூ. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | எரிபொருள் விற்பனை வருமானம் | 79,100,471 | 80,168,413 | 1,067,942 | கணக்கு கூற்றிக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து மேலே உள்ள மீதியை இனங்காண முடியாது. | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிக்கும் அட்டவணைகளின்படி மீதிக்கும் இடையிலான வேறுபாடுகள் இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 07 துறைமுகங்களில் கையிலுள்ள காசு மீதி | 29,818,531 | 28,339,857 | 1,478,674 | இதுதொடர்பில் தவறு இருப்பின் தேடிப்பார்த்து சரிசெய்வதற்கு குறித்துக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிக்கும் அட்டவணைகளின்படி மீதிக்கும் இடையிலான வேறுபாடுகள் இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பல்வேறு நிறுவனங்களிலிருந்து கிடைத்த அளிப்புகள் | 928,366,348 | கிடைத்த திகதிகள், பணம் பெறப்பட்டதற்கான மூல ஆவணங்கள் உடன்படிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் நிறைவேற்றப்பட்ட பணிகள், விரிவான அட்டவணைகள் | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் நீண்ட காலமாக உள்ள மீதிகளாகும் என்பதுடன் இது தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் கணக்காய்வு விசாரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த மீதிகள் தொடர்பான போதிய சான்றுகளைத் தேடுவதற்கு நிறுவனக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இந்த மீதிகள் தொடர்பாக குழுவால் கண்டறியப்பட்ட தகவல்கள் சுற்றறிக்கை PED 01/2021(i) இன்படி நிறுவன கணக்காய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அதன் அங்கீகாரத்தின் பேரில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி, இந்த மீதிகளை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரச தொழில்முயற்சி திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. | கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புரோம் பீச்ட் (Prom peached WHT) | 2,215,769 | விரிவான அட்டவணை மூல ஆவணங்கள் | | |
| (இ) | சுனாமியால் சேதமடைந்த சொத்துகளுக்கு கிடைத்த நிதியேற்பாடு | 945,559,937 | சேதமடைந்த சொத்துக்களை திருத்துவதற்கு ஏற்புடைய போதிய சான்றுகள் உடன்படிக்கை மற்றும் ஒழுங்குமுறைகள் | | |
| (ஈ) | பிற்போட்ட பொறுப்புக்கள் | 1,653,400 | பிற்போட்ட பொறுப்புக்கள் பற்றிய மூல ஆவணங்கள் | | |
| (உ) | நடைபெறும் வேலை | 28,111,329 | நடைபெறும் வேலை கோப்பு, நிறைவேற்றப்பட்ட பணிகள், உடன்படிக்கை | | |
| (ஊ) | கடன்கொடுத்தோரும் பிற கடன்கொடுத்தோரும் | 10,584,147 | உரிய மீதிகளை உறுதிப்படுத்த தேவையான மூல ஆவணங்கள் | | |
| (எ) | நங்கூரம் கடன்பட்டோரும் குத்தகை கடன்பட்டோரும் | 91,631,027 | அட்டவணைகள் வயது பகுப்பாய்வு | | |
| (ஏ) | காணியும் கட்டடமும் | 2,270,851,082 | சொத்துக்கள் ஏடு அட்டவணைகள் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஐ) | வங்கி மீதி | 166,857,402 | துறைமுகங்களினால் தயாரிக்கப்படுகின்ற வங்கி இணைக்க கூற்று மீதிகளை உறுதிப்படுத்தல் | | |
| (ஒ) | முற்கொடுப்பனவுகள் | 15,528,686 | கொடுப்பனவை உறுதிப்படுத்த தேவையான மூல ஆவணங்கள், வயது பகுப்பாய்வுடனான அட்டவணைகள் | | |
| (ஓ) | பாதுகாப்பு கடன்பட்டோர் மீதி மற்றும் திக்கோவிட பழைய கடன் மீதி | 102,009,807 | தனி கடன்பட்டோர் மீதி, மூல ஆவணங்கள், வயது பகுப்பாய்வு | | |
| (ஔ) | கடன்பட்டோர், கிடைக்க வேண்டிய பிடித்துவைத்தல் வரி மற்றும் சன்கென் கப்பலை அகற்றல் பொருட்டு அறவிடப்பட வேண்டிய தொகை | 65,070,045 | உரிய மீதிகளை உறுதிப்படுத்த தேவையான மூல ஆவணங்கள் | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் நீண்ட காலமாக உள்ள மீதிகளாகும் என்பதுடன் இது தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் கணக்காய்வு விசாரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த மீதிகள் தொடர்பான போதிய சான்றுகளைத் தேடுவதற்கு நிறுவனக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இந்த மீதிகள் தொடர்பாக குழுவால் கண்டறியப்பட்ட தகவல்கள் சுற்றறிக்கை PED 01/2021(i) இன்படி நிறுவன கணக்காய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அதன் அங்கீகாரத்தின் பேரில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டதுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி, இந்த மீதிகளை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரச தொழில்முயற்சி திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. | கணக்காய்வு பொருட்டு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |
| (க) | சிவில் பொறியியல் பணிகளுக்காக உறப்பட்ட செலவுகள் | 438,511 | கொள்வனவு தொடர்பாக பெறுகை நடவடிக்கைகளுக்குரிய சான்றுகள், ஏடுகள் மற்றும் உரிய பட்டியல்கள் | | |

## 1.5 சட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 102 & 103 (1) | புராணவெல்ல மீன்பிடி துறைமுக வளாகத்தில் ரூபா4,056,595 பெறுமதியான மலசலகூட உபகரணங்களை சேதப்படுத்தி நாசம் செய்த போதிலும், இது தொடர்பில் உரிய நிதிப்பிரமாணம் பிரகாரம் செயலாற்றவோ அல்லது கூட்டுத்தாபன முகாமைத்துவத்துக்கு அறிவிக்கவோ அல்லது பொலிஸில் முறைப்பாடு செய்யவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | இது தொடர்பில் பொறுப்பானவர்களை இனங்காணுவதில் உள்ள சிரமம் காரணமாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலை காணப்படுவதுடன், எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்தி மலசலகூட முறையை முறையாக பராமரிக்குமாறு துறைமுக முகாமையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. | சேதம் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 102 & 103 (1) பிரகாரம் செயலாற்ற வேண்டும். |
| (ii) | நி.பி.187 (3) | துறைமுகங்கள் மூலம் வசூலிக்கப்படும் பணம் தினமும் வங்கிக்கு அனுப்பாமல் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் இறுதி நாளில், தினசரி எரிபொருள் விற்பனை வருமானம் ரூபா79,100,471 தொகை இவ்வாறு வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், இரண்டு துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதும், ரூபா35,000,000 மற்றும் ரூபா5,000,000 கையில் வைத்திருந்த சம்பவங்கள் | எரிபொருள் விற்பனை நடைபெறும் துறைமுகங்கள் தொடர்பாக, அந்தந்த துறைமுகத்திற்கும் தனித்தனி எரிபொருள் கோப்புகள் பேணப்படுவதுடன், துறைமுகங்கள் தயாரித்த அனைத்து அறிக்கைகளும் அந்த கோப்புகளில் சேர்க்கப்பட்டு, அந்த கோப்புகள் அனைத்தும் அரசாங்க கணக்காய்வு பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. | துறைமுகங்களில் தினமும் வசூலிக்கப்படும் பணம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 187 (3) பிரகாரம் செயலாற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவதானிக்கப்பட்டன. | | |
| (iii) | நி.பி.371 (5) | உரிய பணிகள் முடிந்தவுடன் நிமித்த கட்டுநிதியை தீர்க்க வேண்டிய போதிலும், புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் 03 தடவைகள் பெறப்பட்டிருந்த மொத்தம் ரூபா474,751 ஆன முற்பணத்தைத் தீர்ப்பதற்காக 13-111 நாட்கள் எடுக்கப்பட்டிருந்தன. | துறைமுகங்களில் பணியை மேற்கொள்வதில் போதுமான தொழிலாளிகள் இல்லாமை, தேடிக்கொள்வதில் சிரமம், கண்காணிப்பு அலுவலர்கள் இல்லாமை போன்ற காரணங்களால் விசேட முற்பணங்களைத் தீர்ப்பதற்கு பிரயோகரீதியாக 14 நாட்களை விஞ்சும் சந்தர்ப்பங்களும் உள்ளன. | நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம் நிமித்த கட்டுநிதியை தீர்ப்பதற்கு செயலாற்ற வேண்டும். |
| (iv) | நி.பி. 371 (2)(ஆ) | ஒரு அலுவலருக்கு ஒரே நேரத்தில் பெறக்கூடிய அதிகபட்ச முற்பணம் ரூபா100,000 ஆன போதிலும், புராணவெல்ல மீன்பிடித் துறைமுக அலுவலர்கள் அந்த எல்லையை மீறி, ரூபா148,770க்கும் ரூபா 283,230க்கும் இடையிலான வீச்சினுள் மொத்தம் ரூபா1,003,100 தொகையை விசேட முற்பணமாக 5 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த சந்தர்ப்பங்கள் இருந்தன. | விசேட முற்பணமாக ஒரே நேரத்தில் ரூபா100,000.00 மட்டுமே வழங்க வேண்டிய போதிலும், துறைமுகங்களின் அவசர பராமரிப்பு பணிகளுக்கு அதாவது சிவில் மற்றும் பொறிமுறை பணிகள் பொருட்டு இந்த முற்பணம் வழங்கப்படுவதுடன், அங்கு அப்பணியின் தன்மைக்கு ஏற்ப பணம் கொடுக்கப்படுகிறது. | முற்பணம் வழங்கும்போது நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரகாரம் செயலாற்ற வேண்டும். |
| (v) | நி.பி..571 (3) | 2006 முதல் நிலவும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா12,858,264 தொகையான மீள செலுத்த வேண்டிய டெண்டர் வைப்புக்கள், நிதிப்பிரமாணம் பிரகாரம் அரச வருவாயில் வரவு வைக்கப்படவில்லை. | மீள செலுத்த வேண்டிய டெண்டர் வைப்புத்தொகைகள் இனங்காணப்பட்டுள்ளது டன், 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, இலாபநட்டக் கணக்கில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீள செலுத்த வேண்டிய டெண்டர் வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(3) பிரகாரம் செயலாற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1997 மார்ச் 06ஆம் திகதிய 965/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் 3 ஆம் பிரிவு | இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களாக எரிபொருள் வழங்குதல் மற்றும் விளைவாந்தன்மையான ஏனைய துணை சேவைகளை மீனவர்களுக்கு வழங்குதல் வரை இருந்த போதிலும், பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்களுக்கான எரிபொருள் வழங்கல் தனியார் தரப்பினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | பேருவளை துறைமுகத்தில் எரிபொருள் விற்பனை தனியாரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதுடன், துறைமுகத்தில் உள்ள எரிபொருள் தாங்கிகள் மூலம் மீனவர்களுக்கு எரிபொருள் விற்பனை செய்யப்படுகிறது. மிகவும் நீண்ட காலமாக துறைமுக காணி குத்தகைக்கு எடுக்கப்பட்டு, குத்தகைக்கு எடுக்கப்பட்ட தரப்பினரால் பேணப்படும் எரிபொருள் விற்பனை நிலையமொன்று உள்ளது. | கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிஈடி/12ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனம் 2016-2020 காலப்பகுதிக்கு மட்டுமே இணைந்த திட்டத்தை தயாரித்திருந்ததுடன், அதன்பின் ஆண்டுகளுக்கான இணைந்த திட்டம் தயாரிக்கப்படவில்லை. | தற்போது 2023 முதல் 2028 வரை இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறேன். | பிஈடி/12ஆம் இலக்க 2003 யூன் 02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின்படி இணைந்த திட்டத்தை தயாரித்தல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய 12ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உரிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு குறையாத காலத்தினுள் பாதீட்டு ஆவணத்தை வரிசை அமைச்சு, அரச தொழில்முயற்சியாண்மை திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆனால் | 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஆவணத்தை ஆவணம் 2021 திசெம்பர் 29 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சினால் பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 2022ஆம் ஆண்டுக்கான அவ் அறிக்கை, செயல்திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் ஆகியவை 2024 மார்ச் 18ஆம் திகதி | 2003 யூன் 02 ஆம் திகதிய 12ஆம் இலக்க அரச தொழில்முயற்சி சுற்றறிக்கையின்படி பாதீட்டு ஆவணத்தை தயாரித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டு ஆவணத்தை அதன்படி அங்கீகரிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன<br>. | |
| (உ) | 2006 அரச பெறுகை வழிகாட்டுநெறிகள் கைநூல் | | | |
| (i) | பந்தி 4.2.1 | கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தை தயாரிக்கவில்லை. | இலங்கை மீன்பிடித் துறைமுக கூட்டுத்தாபனம் வருடாந்தம் வருடத்தின் ஆரம்பத்தில் பெறுகைத் திட்டத்தைத் தயாரிப்பதுடன் அதற்கேற்ப அந்த வருடத்தில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பெறுகை வழிகாட்டுநெறிகளின் பந்தி 4.2.1 இன்படி பெறுகைத் திட்டத்தை தயாரித்தல் வேண்டும். |
| (ii) | பந்தி 4.3.1 | கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்கான அனைத்து சார்ந்த செலவுகளின் மொத்த மதிப்பீட்டை தயாரிப்பதும் பந்தி 4.3.3 இன்படி மொத்த செலவு மதிப்பீட்டைத் திருத்துதல் மற்றும் நாளதுவரைப்படுத்தல் செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யவில்லை. | பெறுகை கைநூலின் பந்தி 4.3.3 இன்படி, மொத்த செலவு மதிப்பீடு 2024 முதல் திருத்தப்பட்டு நாளதுவரைப்படுத்தப்படுகிறது. | பெறுகை வழிகாட்டுநெறிகளின் பந்தி 4.3.1 இன்படி மொத்த செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், திருத்துதல் மற்றும் நாளதுவரைப்படுத்தல் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்ண்டிற்கான செயல்பாட்டு விளைவு ரூபா 363,998,388 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் குறைவு ரூபா 136,222,182 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 500,220,570 அதாவது நூற்றுக்கு 367 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. 14 துறைமுகங்களின் செயல்பாட்டு இலாபம் ரூபா 460,779,131 ஆல் அதாவது நூற்றுக்கு 345 ஆல் அதிகரித்தமை மற்றும் 2022ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சீனன் குடா அகழ்வுச் செயற்றிட்ட செயல்பாட்டு இலாபம் ரூபா 66,310,907 ஆனமை என்பன இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீன்பிடி துறைமுகங்களின் செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ஈட்டிய இலாபம் / நட்ட நிலமை பின்வருமாறு.

| மீன்பிடி துறைமுகம் | செயல்பாட்டு இலாபம் / நட்டம் ரூ. | | குறைவு அல்லது அதிகரிப்பு சதவீதம் % |
|---|---|---|---|
| | 2022 | 2021 | |
| பேருவளை | 33,198,600 | 761,297 | 4260.79 |
| காலி | 44,591,588 | 5,969,142 | 647 |
| மிரிஸ்ஸ | 30,891,309 | 4,963,322 | 522 |
| புராணவெல்ல | 9,857,422 | (11,161,594) | 188 |
| தங்காலை | (19,884,663) | (42,361,257) | 53 |
| கிரிந்த | (24,246,631) | (23,119,633) | (4.87) |
| கொட்பே | 14,001,744 | 9,040,677 | 54.87 |
| தொடந்தூவ | (13,589,106) | (13,923,260) | (0.47) |
| ஹிக்கடுவை | (3,754,538) | (19,030,984) | 80.27 |
| கல்பிட்டி | (6,431,832) | (6,304,480) | (2.02) |
| குடாவெல்ல | 46,337,294 | 7,263,325 | 537.96 |
| பாணந்துறை | (9,926,405) | (14,980,763) | 33.74 |
| நீர்கொழும்பு | 22,679,335 | (7,710,157) | 394.14 |
| ஹம்பாந்தோட்டை | (5,380,383) | (23,537,965) | 77.14 |
| அம்பலாங்கொடை | 32,040,266 | (5,340,880) | 699.90 |
| சிலாபம் | (12,755,175) | (14,556,192) | 12.37 |
| வாழைச்சேனை | (2,603,036) | (14,693,334) | 82.28 |
| நில்வெல்ல | 17,224,104 | (4,741,902) | 463.23 |
| திக்கோவிட | 167,773,625 | 77,306,735 | 117.02 |
| சுதுவெல்ல | 7,415,234 | (11,876,324) | 162.44 |
| மயிலடி | 2,379,773 | (9,349,962) | 125.45 |
| கலமடிய | (14,362,168) | (16,316,134) | 11.43 |
| வெல்லமங்கர | 5,775,038 | - | - |
| பேரலிய | 6,347,415 | - | - |

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இரண்டு புதிய மீன்பிடி துறைமுகங்கள் செயற்பட ஆரம்பித்து செயல்பாட்டு இலாபத்தை அடைந்துள்ளதுடன், பேருவளை, காலி, மிரிஸ்ஸ, கொட்பே, குடாவெல்ல மற்றும் திக்கோவிட துறைமுகங்களின் எரிபொருள் வருமானம், நங்கூரக் கட்டண வருமானம் மற்றும் வாடகை என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமை காரணமாக 54.87 வீதத்துக்கும் 4260 வீதத்துக்கும் இடையிலான வீச்சில் இலாபம் அதிகரித்துள்ளது.

(ஆ) மேலும், கடந்த வருடம் நட்டம் அடைந்த புறணாவெல்ல, நீர்கொழும்பு, அம்பலாங்கொடை, நில்வெல்ல, சுதுவெல்ல மற்றும் மயிலடி துறைமுகங்கள் மீளாய்வாண்டில் 125 வீதம் முதல் 700 வீதம் வரை இலாபம் ஈட்டியுள்ளதுடன், எரிபொருள் வருமானம், நங்கூரக் கட்டண வருமானம் மற்றும் வாடகை வருமானம் என்பனவற்றின் அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். இதற்கு மேலதிகமாக, கடந்த

ஆண்டு நட்டம் அடைந்த 6 துறைமுகங்கள், 11 சதவீதத்துக்கும் 82 சதவீதத்துக்கும் இடையிலான சதவீதத்தால் தங்கள் நட்டநிலையை நிவர்த்தி செய்துகொண்டிருந்தனர்.

(இ) கிரிந்த மற்றும் கல்பிட்டி ஆகிய இரண்டு துறைமுகங்கள் மாத்திரமே தொடர்ந்தும் நட்டத்தை அடைந்து வருகின்றன. அவை இன்னும் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே நட்டமடைந்து வருகின்றன.

(ஈ) மீளாய்வாண்டில் பேருவளை வேலை அலகு ரூபா 27,709,161 நட்டத்தை அடைந்ததுடன், கடந்த வருடம் அந்நட்டம் ரூபா 26,802,018 ஆக இருந்தது. அதன்படி, அந்த வேலை அலகு தொடர்ச்சியான நட்டத்தில் உள்ளதாக அவதானிக்கப்படுகிறது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி ரூபா1,242,200 செலவு செய்து புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் 32 கெமராக்கள் கொண்ட பாதுகாப்பு CCTV கெமரா முறைமை நிறுவப்பட்டிருந்துடன், அம் முறைமை நிறுவப்பட்டு 02 மாத குறுகிய காலத்தில் அதன் 02 கெமராக்கள் தொலைந்தவுடன் 02 வருட குறுகிய காலத்தினுள் நிறுவப்பட்ட 32 கெமராக்களில் 10 கெமராக்கள் மட்டுமே செயல்பாட்டிலுள்ளன. | இந்த CCTV கெமரா முறைமை பொருட்டு வழங்கல் கடிதம் 2020.12.28 ஆம் திகதியன்றே உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அத்திகதியின் பின் உரிய செயற்றிட்டத்தின் நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும்போது, 2021.01.02ஆம் திகதியன்று துறைமுகத்தில் Crane இயந்திரம் மூலம் ஏற்பட்ட விபத்தினால் ஒரு கெமரா சேதமடைந்தது. பணம் எதுவும் வசூலிக்கப்படாமல், சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் அன்றைய தினமே மீள்நிலைப்படுத்தப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களால், ஓரளவு செயலிழப்புகள் ஏற்பட்டன, எனினும் இங்கு குறிப்பிட்டுள்ளவாறு முழு கெமரா முறைமையும் நிறுவப்பட்டு 02 மாத குறுகிய காலத்திற்குள் செயலிழந்தமை எனக் குறிப்பிடுதல் சரியான விடயமன்று. | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு ஏற்ப கெமரா முறைமையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2008இல் ரூபா45,000,000க்கு கொள்வனவு செய்யப்பட்ட LG 2554 இடம்பெயர் பாரந்தூக்கியை பழுதுபார்ப்பதற்காக 2018 முதல் 2022 ஒக்டோபர் வரை உதிரி பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா4,754,436 செலவிடப்பட்டிருந்த போதிலும், பாரந்தூக்கி 2023 ஆம் ஆண்டிலேயே மீள்நிலைப்படுத்தப்பட்டமையினால், செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவாக இருந்ததுடன், கிட்டதட்ட ரூபா22,000,000 வருமானத்தை கூட்டுத்தாபனம் இழந்திருந்தது. | இந்த பழுதுபார்த்தல் கூட்டுத்தாபன ஊழியர்களால் ரூபா4,754,436.00 செலவில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, இப்பணியை முடிவுறுத்துவதற்கு எமது கூட்டுத்தாபன ஊழியர்களை பயன்படுத்தியமையினால், பெருமளவு பணத்தை சேமிக்க முடிந்தது. அதன்படி, பாரந்தூக்கியை மீள்நிலைப்படுத்துவதற்காக உறப்பட்ட ரூபா4,754,436.00 தொகை பயனற்ற செலவொன்றில்லை என்பதனை அறிவிக்கிறேன். | பாரந்தூக்கியை மீள்நிலைப்படுத்தி துறைமுகத்தின் நடவடிக்கைகளுக்காக உடனடியாக பயன்படுத்த வேண்டும். |